# ஸ்ரீ காமாஸிகாஷ்டகம்

## வேதாந்த தேசிகர் அருளிச்செய்தது

காஞ்சிபுரத்தில் வேகவதி நதிக்குத் தென்புறத்தில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ நரசிங்கப்பெருமானைப் பற்றியதாகும். இது, 108 திவ்விய தேசங்களுள் ஒன்றாகும். ஆழ்வார்கள் இட்ட திருநாமம் 'வேளுக்கை' இந்தத் தோத்திரத்தில் உபநிஷத்துக்கள் ''பரமபுருஷனே இங்கு நரசிங்கனாய் அவதரித்தான்'' என்று கூறுவதாக சுவாமி தேசிகர் அருளியுள்ளார். இந்த ஸ்தோத்திரத்தால் எல்லாப் பயன்களையும் பெறலாம். தினமும் காலை மாலை படிப்பவர்கள் வறுமை நீங்கிச் செல்வம் பெறுவர் என்பர் பெரியோர்:-

1. ச்ருதீநாம் உத்தரம் பாகம், வேகவத்யாயாச்ச தக்ஷிணம் ।
காமாததிவஸந் ஜீயாத் கச்சிதத்புதகேஸரீ ॥

பொழிப்புரை:-வேதங்களின் மேற்பாகத்திலும், (வடபுறத்திலும்) வேகவதியாற்றின் தென்புறத்திலும், தன் ஸங்கல்பத்தால் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற அற்புதமான சிங்க வடிவம் கொண்ட எம்பெருமான் எப்போது மேம்பட்டவனாகி அடியார்களை ரக்ஷிக்குமவனாவான்.

2. தபநேந்த்வக்தி தாபாந் அபசிநோது ந: ।
தாமநீய ரஹஸ்யாநாம் ஸார: காமாஸிகா ஹரி; ॥

உரை :- சூரியன் சந்திரன் அக்னி ஆகியவர்களைக் கண்களாகக் கொண்டவனாய்-'ந்ருஸிம்மதாபநீயம்' என்ற புகழ் பெற்ற உபநிஷத்துக்களால் கொண்டாடப்பட்டவனாய் விளங்கும் காமாஸிகா நரசிம்மன், நம்முடைய மூன்று தாபங்களையும் போக்கியருள வேண்டும். மூன்று தாபங்களாவன (1) ஆத்யாத்மிகம்-தலைநோய்-ஜலதோஷம்-பயம்-கோபம் முதலியன. (2) ஆதி பௌதிகம். மிருகம் பக்ஷி மனிதர் முதலிய பூதங்களால் வரும் துன்பம் (3) ஆதி தைவிகம் குளிர்-சூடு-மழை-காற்று முதலியவற்றால் வரும் துன்பம். இந்த க்ஷேத்திரத்தில் நரசிம்மன் மூன்று கண்களோடு ஸேவை ஸாதிக்கிறான். அம்மூன்றாலும் மூன்று தாபங்களையும் போக்குகிறான் என்பது கருத்து.

3. ஆகண்டமாதி புருஷம், கண்டீரவம் உபரிகுண்டித அராதிம்
வேகோ கண்ட ஸங்காத் விமுக்த வைகுண்ட பூஹுமதிம்
உபாஸே

கழுத்து வரையில் புராண புருஷ வடிவம் கொண்டவனாய் (கழுத்துக்கு) மேல் சிங்கவுருவம் கொண்டவனாய், பகைவனைக் கொன்றவனாய் வேகவதி நதிக்குப் பக்கத்திலுள்ள பிரதேசத்தில் ஆசையினால் ஸ்ரீவைகுண்ட வாசத்தையும் புறக்கணித்து வந்து அமர்ந்து ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ நரசிங்கப் பெருமானை வழிபடுகிறேன்.

4. பந்தும் அகிலஸ்யஜந்தோ: பந்துரபர்யங்க பந்தரமணீயம்
விஷமவிலோசநமீடே வேகவதபுலிந கேளிநரஸம்ஹம்

4. சகலமான பிராணிகளுக்கும் உறவினனாய் திடமான பர்யங்க பந்தம் என்னும் ஆஸநத்தால் அழகு பெற்றவனாய், ஒற்றைப் படையான மூன்று கண்களையுடையவனாய், வேகவதி நதியின் மணல் திட்டில் விளையாடுகின்றவனாயுள்ள நரசிங்கப் பெருமானைத் துதிக்கிறேன்.

இந்த க்ஷேத்திரத்தில் நித்தய ஸித்தனான நரசிங்கன் யோகம் புரிகின்றான். என்ன யோகம்? அடியார்களைக் காக்க சிந்தனை செய்யும் யோகம்தான். இந்த யோகத்திற்காகப் 'பர்யங்க பங்கம்' என்றும் ஆஸநத்தைக் கொண்டுள்ளான். இந்த ஆஸநமும் அவனுக்கு ஓர் அழகைத் தருகின்றது. யோகவிதி ஆஸனமாகும். இங்கு மூன்றுகண்களோடு ஸேவை ஸாதிப்பதும் அதிசயம், ஆதலினால்தான் அத்புத கேஸரி என்றார் ஆசாரியர்.

ஸ்வஸ்தாநேஷு மருத்கணாந் நியமயந்
ஸ்வாதிந ஸர்வேந்திரிய:
பர்யங்க ஸ்த்திர தாரணா
பரப்கடித ப்ரத்யுக்முக அவஸ்திதி: ।
ப்ராயேண ப்ரணிபேதுஷாம் ப்ரபுரஸௌ
யோகம் நிஜம்சிஷயந்
காமாநாதநுதா தசேஷ ஜகதாம்
காமாஸிகா கேஸரீ ॥

பொருள்: மருத்கணங்களாகிற வாயுக்கூட்டங்களை தம்தம் இடங்களில் நிறுத்திக்கொண்டு, தனக்கு வசப்பட்ட எல்லா இந்திரியங்களையும் உடையவனாய் பர்யங்க பந்தம் என்னும் ஆஸநத்தில் உறுதியாகப் பற்றியதால் வெளிக்காட்டப்பட்ட மேற்கு முகமாயுள்ள நிலையை உடையவனாய், தன்னை அடைந்தவர்களுக்கு தன்னைப் பற்றிய தியானத்தைக் கற்பிக்கின்றவன் போலுள்ள ப்ரபுவான இந்தக் காமாஸிகா நரசிம்மன் எல்லா உலகங்களுக்கும் விரும்பிய பயன்களை அளித்தருள வேண்டும்.

6. விகஸ்வரநக ஸ்வருக்ஷத ஹிரண்ய வக்ஷஸ் ஸ்த்தலீ
நிரர்க்கள விநிக்களத் ருதிர ஸிந்து ஸந்த்யாயிதா: ।
அவந்த । மதநாஸிகா । மநுஜ பஞ்ச்ச வக்த்ரயஸ்ய, மாம்
அஹம் । ப்ரதமிகா மித: ப்ரக்டிதாவஹா பாஹவ: ॥

பொருள்: அலர்ந்த நகங்களாகிய வச்சிரயுதத்தால் பிளக்கப்பட்ட இரணியனது மார்பினின்று தடையின்றி பெருகிய இரத்த வெள்ளத்தால் அந்திப் பொழுதுபோல் ஆயினவாய் நான்முன், நான்முன் என்று போட்டியிடுவதால் போர்புரிவதை வெளிப்படுத்தினவதான கர்மாஸிகா நரசிம்மனுடைய திருக்கைகள் என்னைக் காத்தருள வேண்டும்.

7. ஸடாபடலபீஷணே ஸாபஸாட்ட ஹாஸோத்படே
ஸ்புத்குருதி பரிஸ்புடத் ப்ருகுடிகேஃபி வக்த்ரே க்ருதே ।
க்ருபா கபட கேஸரீன் தநுஜ டிம்பதத்தஸ்த நா
ஸரோஜ ஸத்ருசா த்ருசா வ்யதிபிஷஜ்யதே வ்யஜ்யதே ॥

பொருள்: கபடமான சிங்க உருக்கொண்டவனே, திருமுக மண்டலம் பிடரிமயிர்களால் பயங்கரமாய் பெருஞ்சிரிப்பு மிக்குடையதாய் புருவங்கள் துடிக்கப்பெற்றனவாய்- திருக்கண்ணால் அசுரச் சிறுவனாகிய பிரகலாதனுக்கு, முலைப் பாலூட்டி மாறுபடச் சிகிச்சை செய்து வெளிப்படுகின்றது.

8. த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: த்வயிசாரக்ஷிதி ரக்ஷக: கிமந்யை:
இதி நிச்சிததீ: ச்ரயாமி நித்யம், ந்ருஹரே வேகவதி தடாச்ரயம் த்வாம்.

பொருள்: நரசிங்கப் பெருமானே! நீ என்னைக் காக்கும்பொழுது மற்றவர்கள் காப்பால் யாது பயன்? நீ காக்காமலிருக்கும்பொழுதும் மற்ற காப்பவர்களால் யாது பயன்? என்று உறுதியான எண்ணங்கொண்ட அடியேன் வேகவதி நதிக்கரையை உறைவிடமாகக் கொண்ட உன்னை எப்பொழுதும் அடைகின்றேன்.

9. இத்தம் ஸ்துத: । ஸக்ருதிஹாஷ்டபிரேஷபத்யை:
ஸ்ரீ வேங்கடேச ரசிதைஸ் த்ரிதசேந்திர வந்த்ய: ।
துர்தாந்தகோர துரித த்விரதேந்திர பேதீ
கமாஸிகா நாஹரி: விதநோது காமாந் ॥

பொருள்: காமாஸிகா நரசிங்கப்பெருமானைப் பிரமன் முதலிய எல்லாத் தேவரும், வணங்கி வழிபடுகின்றனர். ஸ்ரீ வேங்கடேச கவியாகிய அடியேன் இவ்வெம்பெருமானை எட்டுச் சிலோகங்கள் கொண்ட இந்தக் காமாஸிகாஷ்டகத்தால் துதித்தேன். இந்த ஸ்தோத்திரத்தை நம்பிக்கையுடனும், பக்தியுடையனும் ஒருமுறை அநுசந்தித்தாலும் இந்த எம்பெருமான் ஒழிக்கமுடியாத கொடிய பாபங்களாகிய யானைகளை ஒழித்து விரும்பிய பலன் களையெல்லாம் அளித்தருள்வான்.

ஸ்ரீ காமாஸி காஷ்டகம் முற்றிற்று.